வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वीओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
General Administration Department

Telephone : 0461 - 2352232
Email id : secretary@vocport.gov.in
Website : www.vocport.gov.in

Press Release no:6 date: 15.08.2023

77th Independence Day celebrated in V.O.Chidambaranar Port Authority

The 77th Independence Day was celebrated by V.O.Chidambaranar Port in a grand manner at the Port's School ground at 08:00 Hrs. on 15.08.2023.

The celebrations to mark the 77th Independence Day of India commenced with the hoisting of the National Flag by Shri Bimal Kumar Jha, Chairperson i/c., V.O. Chidambaranar Port Authority. Thereafter, he took salute from CISF, Port Fire Service and NCC students of the Port Schools.

In his Independence Day message, the Chairperson i/c., recalled the sacrifices made by our freedom fighters and requested all to contribute towards realizing the dreams of our founding fathers and the objectives set out by the Government of India.

Sharing the recent developments at the Port, Shri Bimal Kumar Jha, Chairperson i/c. stated that the Berth No. 9 will soon be converted into a Container terminal with the capacity to handle 6 Lakh TUEs of containers and North Cargo Berth-III will be fully mechanised and dredged to a draft of 14.20 metres for handling bulk cargo. He also stated that bids have been invited for deploying four number of 120 Tonne capacity Harbour Mobile Cranes. The ambitious Outer Harbour Project, with a combined capacity to handle 4 Million TEUs of containers at a cost of Rs.7055 Crores, is under active consideration by the Government, has the potential to transform VOC Port into a Transhipment hub.

He further stated that the 5 MW Solar Power Plant and the 2 MW Wind farm are nearing completion and with these developments, VOC Port would be self-reliant in terms of power production and consumption. VOC Port has been identified by the Government of India for development of Off-shore Wind power, Green Hydrogen hub for production, storage, bunkering and Exports.

As the part of the celebration, Shri Bimal Kumar Jha, Chairperson i/c, also distributed the Meritorious Awards to the officers and staff of various departments of the Port, Port School children & teachers and children of Port employees. The Port's School students, dressed in the vibrant colours exhibited their impactful dance performances and the CISF unit of the Port displayed various demonstrations.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वीओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
General Administration Department

Telephone : 0461 - 2352232
Email id : secretary@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி எண்: 6 நாள்: 15.08.2023

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 77வது சுதந்திர தின விழா கொண்டாட்டங்கள்**

இந்திய திருநாட்டின் 77-வது சுதந்திர தின விழா, துறைமுக பள்ளி மைதானத்தில் சிறப்பான முறையில் 15.08.2023 இன்று காலை 8.00 மணியளவில் கொண்டாடப்பட்டது.

77வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு திரு. பிமல் குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் (பொறுப்பு) அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படை (CISF), துறைமுக தீயணைப்புப் படை, துறைமுக பள்ளி மாணவ, மாணவியர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

திரு. பிமல் குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் (பொறுப்பு) அவர்கள், தனது சுதந்திரதின உரையில், நம்முடைய முன்னோர்கள் மற்றும் சுதந்திர போராட்ட தியாகிகளின் தியாகத்தை சுட்டிக்காட்டினார். மேலும் நமது தியாகிகளின் கனவுகள் மற்றும் நமது அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை நினைவாக்குவதில் நாம் அனைவரும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று கூறினார்.

மேலும் அவர் தனது உரையில், துறைமுகத்தில் 6 இலட்சம் டிஇயு சரக்குபெட்டகங்களை கையாளும் வசதியுடன் கூடிய 9வது பொது சரக்குதளத்தினை சரக்கு பெட்டக முனையமாக மாற்றுதல் மற்றும் வடக்கு சரக்கு தளத்தினை முழுமையாக இயந்திரமயமாக்கல் மற்றும் மிதவை ஆழம் 14.20 மீட்டராக ஆழப்படுத்தும் பணி போன்ற வளர்ச்சி திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளதை உங்களுடன் இத்தருணத்தில் பகிர்ந்து கொள்ளுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறினார். மேலும் அவர் நான்கு 120 டன் திறன் கொண்ட நகரும் பளுத்தூக்கி இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளதை குறிப்பிட்டார். வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் கனவு திட்டமான வெளித்துறைமுக திட்டத்திற்கு ரூபாய் 7055 கோடி திட்ட மதீப்பிட்டில் 4 மில்லியன் டிஇயு சரக்குபெட்டகங்களை கையாளும் வசதியை ஏற்படுத்தி, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் சரக்கு பரிமாற்ற முனையமாக திகழ்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்று கூறினார்.

மேலும் அவர் புதுப்பிக்கப்பட்ட எரிசக்தியின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு 5 மெகா வாட் சூரிய மின்னாலை மற்றும் 2 மெகாவாட் காற்றாலை திட்டப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது என்று கூறினார். இந்திய அரசு வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் கடல்பகுதியில் காற்றாலை, பசுமை ஹைட்ரன் முனையத்தில சேமிப்பு மற்றும் ஏற்றுமதிக்கான அமைப்புகளை நிறுவ வலியுறுத்தியுள்ளது என்று கூறினார்.

திரு பிமல் குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் (பொறுப்பு), அவர்களால் துறைமுகத்தில் மிகச் சிறப்பாக பணிபுரிந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும், துறைமுக பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும், துறைமுக ஊழியர்களின் குழந்தைகளுக்கும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள். துறைமுக பள்ளிகளின் நடன நிகழ்ச்சிகள் மற்றும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் பல்வேறு பாதுகாப்பு செயல்முறை விளக்கங்கள் செய்து காட்டினார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி